Registered as a Newspaper

தொழிற் பயிற்சி
RADIO, T.V.DECK REPAIRING, QUANITY SURVEYORING, DRAUGHTSMANSHIP, WIRING, WINDING.
JAFFNA Technical Institute.
52/1, Stanley Road, JAFFNA.

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ-1/=

COMPUTER PROGRAMMING
(BASIC, COBOL)
50 மணித்தியால செய்முறைப் பயிற்சி அச்சிடப்பட்ட பாடக் குறிப்புகள் வழங்கப்படும்.
ஆரம்பம்: 8 - 3 - 86
காலை 9 a.m.
JAFFNA TECHNICAL INSTITUTE
52/1, Stanley Road, JAFFNA.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு மாசி மீ 22 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 24 (06-03-1986) UTHAYAN – A LIVELY TAMIL DAILY கதிர்:93

100 கிராமசேவகர்களை

ராணுவ முகாம் மாநாட்டுக்கு போகவிடாது தடை!

'ரெலோ' போராளிகள்

தக்க தருணத்தில் கடத்தி விடுவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்ப்பாணம்,கோட்டைஇராணுவ முகாமில் நடக்க ஏற்பாடாகிய மாநாடு ஒன்றுக்குச் செல்ல இருந்த, சுமார் 100 கிராம சேவகர்கள், அதற்குப் போகவிடாது தடுக்கப்பட்டனர்.

மாநாட்டுக்குச்செல்வதற்குத் தேவையான ஆயத்தங்களுடன் நின்ற குடாநாட்டைச் சேர்ந்த கிராம சேவகர்களை தமிழீழ விடுதலை இயக்கத்தைச் (ரெலோவைச்) சேர்ந்த போராளிகள் தக்க நேரத்தில் கடத்திச் சென்று பின்னர் விடுவித்தனர்.

இச்சம்பவம் பற்றி அறியப்படுவதாவது:–

யாழ். குடாநாட்டில் உள்ள கிராமசேவையாளர்கள் அனைவரையும் மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக கோட்டை இராணுவ முகாமுக்கு வரும்படி இணைப்பதிகாரி பிரிகேடியர் ரூபசிங்கா அழைத்து இருந்தார்.

மாநாடு நேற்றுக்காலை 9 மணிக்கு நடைபெறுவதாக இருந்தது.

அதற்கு முதல் நூற்றுக்கும் அதிகமான கிராம சேவையாளர்கள், யாழ். செயலகம் சென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சந்தித்தனர்.

அங்கு கையெழுத்தும் இட்டனர்.

கோட்டை முகாமுக்குச் செல்வதற்குத் தேவையான கடிதங்களை அங்குள்ள அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

அதன் பின்னர் காலை 9 மணியளவில் யாழ் செயலகம் முன்னால் இருந்து பஸ் எடுப்பதற்கு பஸ் தரிப்புக்கு வந்தனர்.

அச்சமயம் இரண்டு மினிபஸ், ஒரு அரசபஸ் ஆகியவற்றில் அந்த இடத்துக்கு ஆயுதந் தரித்த போராளிகள் வந்து சேர்ந்தனர்.

தம்மை தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த போராளிகள் என்று அவர்கள் கிராம சேவகர்களிடம் அறிமுகப் படுத்திக்கொண்டனர்.

பின்னர் கிராமசேவையாளர்களின் கண்கள் துணியால் மூடிக் கட்டப்பட்டன.

போராளிகள் கொண்டு வந்திருந்த பஸ்களில் அனைவரும் ஏற்றப்பட்டனர்.

தூர இடம் ஒன்றுக்குக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

டிக்ஸிற் சனியன்று வருவார்

கொழும்பு, மார்ச்6

இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் சனிக்கிழமை கொழும்பு திரும்புகிறார்.

இலங்கை இனப் பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் மற்றும் அதிகாரிகளுடன் மேலும் பேச்சுக்கள் நடத்தவே திரு.டிக்ஸிற் சனிக்கிழமை வரை டில்லியில் தங்கியிருக்க வேண்டி உள்ளது என்று கூறப்படுகிறது.

பாடசாலை சேதம்

யாழ்ப்பாணம், மார்ச்6

மன்னாரில் பரப்புக்கடந்தான் பகுதியில் கடந்த திங்கள் மாலை யுத்த விமானம் மூலம் குண்டு வீசியதில் பரப்புக் கடந்தான் மகாவித்தியாலயம் முற்றாகச் சேதம் அடைந்தது.

அருகில் இருந்த வீடு ஒன்றும் சேதம் அடைந்தது. உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

சுபநேரம்
06 - 03 - 1986
வியாழக்கிழமை
சுபநேரம்:
7-56 முதல் 9-26 வரை ராகுகாலம்:
1.56 முதல் 3.26 வரை
இன்று பகலுக்கும் இரவுக்குரிய பொருந்தும்.
ஏகாதசி விரதம்

குடாநாட்டிலும் கறுப்புச் சட்டைகள் வந்து குவிகின்றன!

யாழ். குடாநாட்டிலும் கறுப்புச் சட்டைகள் வந்து குவிகின்றன.

ஆச்சரியப்படாதீர்கள்!

கறுப்புச் சட்டை அணிந்த சீருடையினர் தான் இங்கு குவிக்கப்படுகிறார்கள்.

வடபகுதியில் உள்ள ஆயுதப்படை முகாமிற்கு நேற்றும் விமானங்களில் பல தடவைகள் கறுப்பு நிற உடை அணிந்த ஆயுதப்படையினர் கொண்டு வந்து சேர்க்கப்பட்டனர் என்று மிகவும் நம்பிக்கையாகத் தெரியவருகிறது. இவர்கள் நேற்று அதிகாலை பலாலி முகாம் வந்து சேர்ந்தார்களாம்.

ஏற்கனவே கடந்த சனிக்கிழமை அன்று பலாலி முகாம் வந்து சேர்ந்த கறுப்புஉடை அணிந்தவர்களுடன் இவர்களும் சேர்ந்து நேற்று யாழ் கோட்டை, நாவற்குழி, தொண்டமானாறு, பருத்தித்துறை போன்ற இடங்களுக்கு விசேட கடமைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர்.

குண்டுப் பீதி!

கொழும்பு, மார்ச் 6

நேற்றுப் பிற்பகல் கொழும்புத்துறைமுகத்துக்கு அருகில் மினிபஸ் ஒன்றில் மர்மப் பார்சல் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

உடனடியாகப் பொலீஸ், இராணுவம் அந்த இடத்துக்கு வரவழைக்கப்பட்டன.

பார்சலை நோக்கி இராணுவச் சிப்பாய்கள் சுட்டனர். பார்சல் தூள் தூளாகியது.

சிப்பாய்களின் துப்பாக்கிகளில் இருந்து வந்த வெடிச்சத்தம் தவிர வேறு சத்தம் எதுவும் கேட்கவில்லை.

பார்சலில் துணிகளும் கண்ணாடித் துண்டுகளும் மட்டுமே கிடந்தன.

கைதாகும் தமிழர் நெல் ஊறவைக்கும் தொட்டிக்குள் தடுத்துவைப்பு

மட்டக்களப்பு, மார்ச் 6

தேடுதலின்போது கைது செய்யப்படும் தமிழர்கள் நெல் ஊறப் பயன்படுத்தப்படும் தொட்டிக்குள் தடுத்து வைக்கப்படுகின்றார்களாம்.

சந்திவெளி ஆயுதப்படை முகாமில் நிலவும் இட நெருக்கடி காரணமாகத் தான் இந்த நடைமுறை அனுட்டிக்கப்படுகிறதாம்.

சந்திவெளி முகாம் அரிசி ஆலை ஒன்றில் அமைக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்படுபவர்களை தடுத்து வைக்க முகாமில் இட வசதி இல்லாததனால், நெல் ஊற வைக்கும் தொட்டி தான் அதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

தொட்டிக்கு மேல் கூரை போடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மட்டக்களப்பு பிரஜைகள்குழு, இணைப்பு அதிகாரியிடம் முறையிட்டுள்ளது.

இலங்கைக்கு இரண்டு ஜனாதிபதிகள்

அனுரா கூறுகிறார்

கொழும்பு,மார்ச்6

வடபகுதியைத் தமிழர் ஆளுகின்றனர்.

அனுராதபுரத்துக்கு அப்பால்தான் இன்னொரு நாடு உள்ளது.

வெகுவிரைவில் இலங்கைக்கு இரண்டு ஜனாதிபதிகள் வரப்போகின்றார்கள்.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டார நாயக்கா சொன்னார்.

அம்பலாங்கொட என்னும் இடத்தில் நடந்த சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் திரு. அனுரா பண்டார நாயக்கா இப்படிச் சொன்னார்.

தமிழரிடம் நாட்டின் மூன்றில் ஒரு பகுதி

நிச்சயம் என்கிறார் சிறிமாவோ

கொழும்பு,மார்ச்6

"இந்த நாட்டின் மூன்றில் ஒரு பங்கு தமிழரின் கைகளுக்குப் போவது நிச்சயம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா இப்படிச் சொன்னார்.

அம்பலாங்கொடையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது;

ஜெயவர்த்தனா 1977 இல் பதவிக்கு வந்தார். நாட்டை 'நோயாளி' யின் நிலையில் பொறுப்பேற்பதாக அச்சமயம் ஜெயவர்த்தனா சொன்னார்.

'நோயாளி' நிலையில் ஏற்கப்பட்ட நாட்டுக்கு இன்று புதுப்புது நோய்கள் வந்துள்ளன. இந்த நோய்களுக்கு என்னமருந்துகளைகொடுப்பது என்பதை கண்டுபிடிக்க முடியாத நிலையில் ஜெயவர்த்தனா திணறுகின்றார்.

மாவட்ட சபைத் தேர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நாகதீப விகாராதிபதி முன்மாதிரி

யாழ்ப்பாணம்,மார்ச்6

நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்கு ஏற்பட்ட சேதம் பாரியது.

ஆனால் அதேவேளை நயினாதீவில் வாழும் விகாராதிபதி நடந்து கொண்ட முன்மாதிரி அப்பகுதி மக்களை மெய்சிலிர்க்க வைத்திருக்கிறது.

சீருடையினர் பொதுமக்களைத்தாக்க முகாமிலிருந்து புறப்பட்டார்களாம். அவ்வேளை அவர்களுக்கு முன்னால் குறுக்கே வந்தார் நாகதீப விகாராதிபதி வண பிரமாணவத்த தர்மகீர்த்தி தேரோ.

தமது மேலங்கிகளைத் தூக்கி எறிந்த அவர் "முதலில் எனது உயிரைப் பலி எடுங்கள் அதன் பின்னர் அப்பாவிப் பொதுமக்களை தாக்குங்கள்" என்று சீருடையினரைப் பார்த்துக் கூறினராம்.

தேரரின் ஆவேசத்தைக் கண்ட சீருடையினர் தமது அடாவடித்தனத்தைக் கைவிட்டு பின் வாங்கினார்கள் என்று அறியப்படுகிறது.

நயினாதீவு மக்கள் மீது தேரர் வைத்திருந்த நல்லெண்ணமே அவரை இப்படி செய்ய வைத்தது என்று ஊர்மக்கள் பேசிக் கொண்டனர்.

நயினாதீவில் பதற்றம் நீங்கவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 6

செவ்வாய்க்கிழமை இரவும் நயினாதீவுப் பகுதியில் ஆயுதப் படையினர் பொதுமக்களைத் தாக்கியதாகச் சொல்லப்படுகிறது.

நயினாதீவு மேற்குப் பக்கத்துக்கு சிவிலில் சென்றதாகச் சொல்லப்படும் படையினர் அப்பகுதி வீடுகளில் சோதனையிடுவதாகக் கூறி அங்கிருந்தவர்களைத் தாக்கினார்களாம்.

இதேவேளை நயினாதீவு வடக்கில் உள்ள மக்கள் தெற்கு, கிழக்கு, மேற்குப் பகுதிகளுக்குச் செல்ல முடியாது இருக்கின்றனர்.

நேற்றும் நயினாதீவில் பதற்றம் தணியவில்லை. கூட்டுப்படை முகாமில் மேலதிக ஆயுதப்படையினரும், கடலில் பீரங்கி கப்பல்களும் தரித்து நிற்பதால் மக்கள் மத்தியில் பீதி நிலவியது.

நயினாதீவில் உள்ள நாகபூஷணி அம்பாளைத் தரிசிக்க குடாநாட்டில் பல பகுதிகளில் இருந்தும் சென்றவர்கள், சென்ற திங்கட்கிழமைச் சப்ப

(4 ஆம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்சினைக்கு தீர்வு

செயலில் வேண்டும் வாயால் சொன்னால் மட்டும் போதாது

ராஜீவ் வலியுறுத்துகிறார்

புதுடில்லி, மார்ச் 5

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று வாயால் சொன்னால் மட்டும் காணாது.

அதைச் செயலிலும் காட்டவேண்டும்.

அதுதான் இந்தியாவின் விருப்பம் என்று இலங்கை அரசுக்கு பிரதமர் ராஜீவ் காந்தி வலியுறுத்திச் சொன்னார்.

நேற்று ராஜ்ய சபாவில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை முடித்து வைத்துப் பேசுகையில் பிரதமர் காந்தி இதனைத் தெரிவித்தார்.

அச்சமயம் மேற்கண்ட வேண்டுகோளை திரு. காந்தி இலங்கைக்கு விடுத்தார்.

திரு. ராஜீவ் காந்தி மேலும் பேசுகையில் சொன்னதாவது;

இலங்கையில் தினமும் குடிமக்கள் கொல்லப்படுகிறார்கள். ஒன்றுமறியாத அப்பாவிகள் உயிரிழக்கின்றார்கள்.

பேச்சுக்கள் மூலம் அமைதித் தீர்வொன்றைக் காண வைக்க இந்தியா இரண்டு சாராரையும் ஒன்று சேர்க்க முயன்றது.

இம் முயற்சியில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டது.

மேலும் முன்னேற்றம் காணப்படலாம் என்ற நப்பிக்கை உண்டு.

இந்தியாவின் முக்கிய பிரச்சினை இலங்கைத் தமிழ் அகதிகள் தான்.

அவர்கள் தாயகத்துக்கு கண்ணியமாகவும் பத்திரமாகவும் திரும்பிப் போகும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

இலங்கையில் இடம் பெறும் சம்பவங்களுடன் இந்தியா சம்பந்தப்பட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இராமநாதபுரத்திலே இராணுவ முகாம் எண்ட உடனே இஞ்சை எங்கடை இராமண்ணாமார் இப்பவே கொடுக்குக் கட்டுவினமோ ஆருக்குத் தெரியும்!

அடிப்படை உரிமை விசாரணைக் குழு

கொழும்பு, மார்ச் 6

அடிப்படை மனித உரிமைகள் ஆணைக்குழு ஒன்றை ஸ்தாபிக்க அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது.

சாதி,மத, இன,மொழி தொடர்பில் தனி மனித அடிப்படை உரிமைகள் மீறப்படுவதை விசாரிக்க இந்தக் குழுவுக்கு பூரண அதிகாரம் வழங்கப்படும். குழுவில் பத்துப்பேர் அங்கம் வகிப்பர்.

இதற்காக, ஏற்கனவே இயங்கிவரும் மனித உரிமைகள் இயக்கம்தொடர்பான அமைப்புச் சட்டங்களில் திருத்தம் கொண்டுவர அரசு உத்தேசித்திருக்கிறது.

குழுவிற்கு கிடைக்கும் முறைப்பாடுகள் குறித்து தன்னிச்சையாக விசாரிப்பதற்கு குழு அதிகாரம் கொண்டிருக்கும்.

இராணுவப் படைப் பிரிவு

இராமநாதபுரம், மண்டபத்தில்

தமிழக எம். பிக்கள் ராஜீவை கோருகிறார்கள்

புதுடில்லி, மார்ச் 5

வெளிநாட்டுச் சக்திகளின் அச்சுறுத்தலை இலங்கையில் இருந்து இந்தியா எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதைத் தடுத்து நிறுத்த தமிழ்நாட்டில் இராமநாதபுரம், மண்டபம் பகுதிகளில் இராணுவப்படைப் பிரிவு ஒன்றை மத்திய அரசு நிறுத்தி வைக்க வேண்டும்.

இப்படி தமிழகத்தைச் சேர்ந்த 18 எம். பிக்கள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய மகஜரில் கோரப்பட்டிருக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினையினால் இராமநாதபுரம் பகுதியில் பதற்றம் நிலவுகிறது. இந்த நிலையில் இராமநாதபுரம் பகுதியில் இராணுவப் பிரிவு ஒன்று நிறுத்தப்பட வேண்டியது அவசியம்–

இப்படி அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

இந்திய கடல் எல்லையை பாரத கப்பல் தாண்டவில்லை

பத்திரிகைச் செய்திக்கு மறுப்பு

கொழும்பு, மார்ச் 6

இந்தியக் கடல் எல்லையை இந்தியக் கப்பல்கள் தாண்டவில்லை.

இப்படி இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

"கச்சதீவுக்கு அருகில் இந்தியக் கடற்படைக் கப்பல் ஒன்று காணப்பட்டது.

கச்சதீவில் மீனவர்களுடன் ஏற்பட்ட தகராறில் ஒரு போராளி இறந்தார். இரண்டு போராளிகள் உயிர்தப்பிக் கடலில் நின்ற 'எல்—17' என்ற இந்தியக் கப்பலில் ஏறித் தப்பிச் சென்று விட்டனர்.

இலங்கைக் கடலில் இந்தியக் கப்பல் காணப்பட்டது பாதுகாப்பு வட்டாரங்களில் பதற்றத்தை

(4 ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் அகதிகள் செலவினம்: இலங்கையும் பகிர வேண்டும்

புதிய யோசனை குறித்து இந்தியா பரிசீலனை

இந்தியாவில் வைத்து இலங்கைத் தமிழ் அகதிகளைப் பராமரிக்கும் செலவை இலங்கையும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற யோசனை குறித்து இந்தியா பரிசீலித்து வருகின்றது

இத்தகவலை இணை அமைச்சர் திரு.கே.ஆர். நாராயணன் ராஜ்ய சபாவில் நேற்று வெளியிட்டார்.

எழுத்து மூலமான பதிலில் திரு. நாராயணன் மேலும் கூறியதாவது;

1985 டிசம்பர்31வரை 1 லட்சத்து 24 ஆயிரத்து 828 தமிழர்கள் அகதிகளாக இலங்கையில் இருந்து தமிழ் நாடு வந்து இருந்தனர்.

அகதிகளாக வந்த எவரும் இதுவரை இலங்கைக்குத் திரும்பிச் செல்லவில்லை.

இலங்கைத் தமிழ் அகதிகள் பற்றிய முழு விவரங்களையும் சமர்ப்பிக்கும்படி தமிழக அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய அகதி முகாம் எதுவும் தமிழகத்தில் திறக்கப்படவும் இல்லை.

இப்படி இணை அமைச்சர் திரு. நாராயணன் சொன்னார்

இளைய தலைமுறையினரை ஈர்க்கும் இன்றைய நாளிதழ்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமலாவுக்கு இப்போது படபடப்பு இல்லையாம்

'மைதிலி என்னைக் காதலி' படத்தின் மூலம் திரையுலகிக்கு அறிமுகமாகி இருப்பவர் அமலா. இந்திய–அயர்லாந்து தம்பதியினரின் புதல்வி இவர்.

அமலா தனது வாழ்க்கையில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை இங்கே கூறுகிறார்.

ஐந்து வயதில், ஒரு முறை பத்மா சுப்பிரமணியத்தின் நடனத்தைப் பார்த்தேன். அவ்வளவுதான்! பரத நாட்டியத்தின் மேல் எனக்குப் பைத்தியமே பிடித்து விட்டது.

நடந்தால் கூட நடனமாடிக்கொண்டு தான் நடப்பேன். என் ஆர்வத்தைப் பார்த்த தந்தை என்னை நடனம் கற்றுக்கொள்ளச் செய்தார்.

ஆறு மாதங்களில் ஒரு விழாவில் நடனம் ஆடினேன். சின்னப் பெண்ணான நான் ஆடியதைப் பார்த்து, அனைவரும் கைதட்டி ஆரவாரம் செய்தது மறக்க முடியாத நிகழ்ச்சி.

'மைதிலி என்னைக் காதலி'க்காக நாட்டிய ஆசிரியை ஸ்ரீ வித்யா சிஷ்யையாக நான் நடிக்க வேண்டும். இதுதான் முதல் காட்சி.

எனக்கு முதல் படம் என்று தெரிந்து கொண்டு, வாழ்த்தி ஊக்குவித்தார் நடன பாவங்களை விடுத்து சினிமாவில் எப்படி நடிக்க வேண்டும் என்றும் எப்படி வசனத்தை உச்சரிக்க வேண்டும் என்றும் சொன்னார் நானும் பயமில்லாமல் நடித்தேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் பி. பி. சி நிறுவனத்தார், நான் படித்த கலாஷேத்ரா வைப்பற்றி ஒரு நிகழ்ச்சி தயாரித்தனர். நான் அதில் பேசினேன்.

ஆங்கிலத்தில் பேசியதால் பயமின்றி தடங்கலின்றி பேசினேன்.

நடிகை ஆனதும் ஒரு பிரபல வார இதழின் நிருபர் என்னை பேடிகாண வந்தார்.

பேட்டி எப்படி எடுப்பார்கள் என்பதை அறிய மனதில் குறுகுறுப்பு. என்ன கேட்பாரோ என்று படபடப்பு மொத்தத்தில் ஒரே பரபரப்பு.

ஆனால், இப்போது படபடப்பு, பயம் எல்லாம் பறந்தோடி விட்டது என்கிறார் அமலா.

திருமதி. அக்கியூனோவின்

பிலிப்பீன்ஸ் அரசுக்கு அவசர ராணுவ உதவி

அமெரிக்கா வழங்கும்

வாஷிங்டன், மார்ச். 5

புதிய பிலிப்பீன் அரசாங்கத்துக்கு அவசரமாக ராணுவ, பொருளாதார உதவிகளை வழங்க அமெரிக்கா முன் வந்துள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் காஸ்பர் வெயின்பேஹர் இது சம்பந்தமாக அமெரிக்க காங்கிரஸுக்குச் சிபாரிசு செய்ய இருக்கிறார்.

உதவிகள் சப்பந்தமாக மணிலாவுடன் தொடர்பு கொண்டு உள்ளேன் ஏப்ரல் மாதத்தில் மாணிலாவுக்கு விஜயம் செய்ய எண்ணி உள்ளேன்.

இப்படி பாதுகாப்பு அமைச்சர் டெலிவிஷன் பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இதனிடையில் நிக்கரகுவா அரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்பவர்களுக்கு கூடுதல் உதவியை அளிக்க வேண்டும் என்று அமெரிக்க வெளி நாட்டமைச்சர் ஜோர்ஜ் சுல்ட்ஸ், காங்கிரசைக் கேட்டுள்ளார்.

பிலிப்பீன்ஸில் மார்க்கோஸ் அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்ததிலும் பார்க்க நிக்கிரகுவா அரசுக்கு எதிரா மக்கள் அதிக அதிருப்தி அடைந்துள்ளனர்.

இப்படி திரு. சுல்ட்ஸ் சொன்னார்.

பிலிப்பீன்ஸ்

பாதுகாப்பு மந்திரியை கொல்வதற்கு சதி

முறியடிக்கப்பட்டதாக அறிவிப்பு

மணிலா, மார்ச். 5

பிலிப்பீன்ஸ் பாதுகாப்பு அமைச்சர் ஜிவான் பொன்ஸ என்றிலியைக் கொலை செய்ய எடுத்த சதிமுயற்சி முறியடிக்கப்பட்டுவிட்டது.

இந்த முயற்சியில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் மார்க்கோஸ் ஆதரவு மேயர் ஒருவரும் அவரது மெய்காப்பாளர்கள் 8 பேரும் உடனடியாக பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் எடுத்துச் சென்ற இரண்டு கார்களில் றைபிள்கள் பெருந்தொகையில் குவிக்கப்பட்டிருக்கக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆயுதங்களில் ஏ. கே.47ரக ஆயுதங்களும் இஸ்ரவேலின் 'யூனிஸ்' ரக ஆயுதங்களும் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது

கொலை முயற்சியை மேற்கொள்ள எத்தனித்த இந்தக் குழுவினர், பத்திரிகையாளர் மாநாடொன்றைப் பாதுகாப்பு அமைச்சர் நடத்திக் கொண்டிருந்த போது அவரை நெருங்க முயன்றனர்.

எச்சரிக்கையுடன் அங்கு கடமையில் நின்ற பாதுகாப்புப் படையினர் உடனடியாக இதை முறியடித்து சந்தேக நபர்களையும் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேசும் மொழி பற்றி ஒரு புள்ளி விவரம்

லண்டன், மார்ச். 5

உலகில் 100 கோடி மக்கள் ஆங்கிலம் பேசுகின்றார்கள்.

இப்படி "ரீடர்ஸ் டைஜஸ்ட்" சஞ்சிகை புள்ளி விவரம் வெளியிட்டுள்ளது.

'சரியான நேரத்தில் சரியான வார்த்தை' என்ற தலைப்பில் இப் புள்ளி விவரம் வெளியிடப்பட்டிருக்கிறது.

உலகில் ஆகக்கூடுதலான மக்களினால் பேசப்படும் மொழிகள் பற்றியும் அப்புள்ளிவிவரப் பட்டியலில் கூறப்பட்டுள்ளது.

அவை வருமாறு;

மண்டாரின் (சீன மொழி): 80 கோடி
ஸ்பானிஷ்: 25 கோடி
ஹிந்தி: 20 கோடி
அரபு: 15 கோடி
பெங்காலி: 15 கோடி
ரஷ்ய மொழி: 15 கோடி

மகளின் புத்தகத்தினால் றேகன் தம்பதி கவலை

நியூயோர்க், மார்ச். 5

மகள் எழுதிய புத்தகம் குறித்து தந்தையும் தாயும் கவலை அடைந்துள்ளர்.

இப்படி அமெரிக்க சஞ்சிகையான 'நியூஸ்வீக்' எழுதி இருக்கிறது.

கவலை அடைந்து இருப்பவர்கள் அமெரிக்க அதிபர் றேகனும் அவரின் மனைவி நான்ஸியும் ஆவர்.

புத்தகம் எழுதியிருப்பவர் இருவரின் புதல்வியான பட்டி டேவிஸ் ஆவர்.

புத்தகம் எனது மனதைப் புண்படுத்தி விட்டது. இப்படி அதிபர் றேகன் சொன்னார்.

புத்தகத்தைத்திறக்கவே குழப்பமாக இருக்கிறது. இப்படி நான்ஸி றேகன் சொன்னார்.

இப்படி 'நியூஸ்வீக்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

'ஜனாதிபதியான முன்னாள் கலிபோர்ணியா கவர்னரின் புரட்சிகர மகள்'– என்ற தலைப்பில் 33 வயதான பட்டி டேவிஸ் இப்புத்தகத்தை எழுதியிருக்கிறார்.

வெளி உலகில்

தடை செய்யப்பட்ட படம் திரையிட அனுமதி

முன்னாள் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸால் தடை செய்யப்பட்ட 'எனது மகன் லண்டோ' என்ற திரைப்படம் பொதுமக்களுக்குத் திரையிடப்பட வுள்ளது.

ரொலண்டோ கல்மன் என்பவரின் வாழ்க்கையே இந்தப் படம்.

தற்போதைய ஜனாதிபதி கொரொஸன் அக்கியூனோவின் கணவரான பெனிக்னோ அக்கியூனோவைக் கொலை செய்தது இந்த ரொலண்டோ கல்மன்தான் என்று மார்க்கோஸ் ஆதரவாளர்கள் குற்றம் சாட்டினர்.

ஆனால் மார்க்கோஸின் அரச படைகளே அக்கியூனோவைக் கொலை செய்ததாக அரசு விசாரணைக் குழு தீர்ப்பளித்தது.

அதிசக்தி வாய்ந்த துப்பாக்கியே பாவிக்கப்பட்டது

ஸ்டொக்ஹோம், மார்ச்5

சுவீடிஸ் பிரதமர் ஒலொப் பாமேயைச் சுடப் பயன் படுத்திய குண்டு மிக அரிதானது என்று கண்டுபிடிக்கப்பட்டது.

இக்கொலைக்குப் பயன் படுத்தப்பட்ட துப்பாக்கி உலகிலேயே மிகவும் அதிசக்திவாய்ந்த கைத்துப்பாக்கி என்றும் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

அமெரிக்கா–ரஷ்ய உச்சிமாநாடு நடைபெறுவதில் உள்ள முட்டுக்கட்டை நீங்கிவிடும்.

இப்படி பிராவ்தா ஆசிரியர் தெரிவித்தார்.

மாஸ்கோ, மார்ச். 5

ஆயுதபரிகரணம் குறித்து உடன்பாடு ஒன்றுக்கு அமெரிக்கா இணங்குமானால் இரண்டாவது அமெரிக்க–ரஷ்ய உச்சிமாநாடு நடைபெறுவதில் உள்ள முட்டுக்கட்டை நீங்கிவிடும்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27 ஆவது காங்கிரஸ் கூட்டத்துச் செய்திகளைச் சேகரிக்க வந்துள்ள 7 மேற்குநாட்டு பத்திரிகையாளரிடம் பிராவ்தா ஆசிரியர் இதனைத் தெரிவித்தார்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27 ஆவது காங்கிரஸ் கூட்டத்துச் செய்திகளைச் சேகரிக்க வந்துள்ள 7 மேற்குநாட்டு பத்திரிகையாளரிடம் பிராவ்தா ஆசிரியர் இதனைத் தெரிவித்தார்.

நிதி சேகரிப்பு

பலாலி, மார்ச்.6

தெல்லிப்பளையில்நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களின்போது கடமைக்காகச் சென்று கொண்டிருந்த வேளையில் அகால மரணமடைந்ததையிட்டி கணேச வித்தியாலய முன்னாள் அதிபர் திரு. செ. வரதராஜப் பெருமாளின் குடும்பத்துக்கு உதவ காங்கேசன்துறைக் கல்வி வட்டார ஆசிரியர்கள், அதிபர்கள், நலன் விரும்பிகள் நிதி சேகரிக்கும் பணியைத் தொடங்கியுள்ளனர்கள்.

யூனியன் கல்லூரி அதிபர் திரு. க பாலசுந்தரம் குழுவின் தலைவராகவும் திரு வை. பொன்னையா பொருளாளராகவும், திரு. க. செல்லத்துரை செயலாளராகவும் செயற்படுவர்.

குடும்பத்துக்கு பொருள் உதவி

நாகர்கோயில் மார்ச்.6

பருத்தித்துறையில் அண்மையில் இராணுவத்தின் குண்டு வீச்சுக்கு இலக்காகி மரணமடைந்த நகரசபை ஊழியர் திரு. இராஜேந்திரனின் குடும்பத்துக்கு பருத்தித்துறை ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா அரிசி, மா, சீனி, தேயிலை ஆகிய பொருள்களை வழங்கினர்.

இ. தொ. கா கோரிக்கைகள் அமைச்சு பரிசீலனை

யாழ்ப்பாணம், மார்ச் .6

வவுனியா, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு அகதிமுகாம்களில் இருந்து வெளியேற்றப்படும் அகதிகளின் அசௌகரியங்களை நீக்குவது சம்பந்தமான இ தொ. கா வடமாநிலப் பொறுப்பதிகாரி திரு. பி. மருதப்பிள்ளையின் கோரிக்கைகள் புனர்வாழ்வு அமைச்சின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஜனாதிபதி, திரு. மருதப்பிள்ளைக்கு அனுப்பிய பதிலில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளன.

திரு மருதப்பிள்ளை ஜனாதிபதிக்கே தனது முறைப்பாட்டை அனுப்பியிருந்தார்.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

இலங்கையின் இறைமைக்கு பகத்தின் பேச்சு சவால்

சபையில் அகலவத்தை எம். பி.

கொழும்பு, மார்ச்6

இந்திய வெளிநாட்டமைச்சர் பலிராம் பகத்தின் நாடாளுமன்றப் பேச்சு, இலங்கையின் இறைமைக்கு விடுக்கப்பட்ட சவாலாகும்

அகலவத்தை எம். பி. மெரில் காரியவாசம் நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

வெளி நாட்டமைச்சர் திரு. பகத்தின் பேச்சுப் பற்றி நாடாளுமன்றம் விவாதிக்க வேண்டும் என்றுதிரு காரியவாசம் கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றை கொண்டு வந்தார்.

அதன் மீதுபேசுகையில் திரு. காரியவாசம் மேலும்சொன்னதாவது;

இந்திய அமைச்சர் பகத் தனது பேச்சின் மூலம் இலங்கையின் உள்நாட்டு விஷயத்தில் தலையிட்டு விட்டார்.

இந்த நாட்டின் சுதந்திரம், இறைமைக்கு விடுக்கப்பட்ட சவாலாக அமைச்சர் பகத்தின் பேச்சு அமைந்துள்ளது.

இப்பேச்சுக் குறித்து முழு அளவிலான விவாதம் ஒன்று நடத்தப்பட வேண்டும்.

இப்படி திரு. காரியவாசம் சொன்னார்.

அமைச்சர் பகத்தின் பேச்சுக்குறித்து அறிக்கை ஒன்றை அரசு வெளியிடுமா?என்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினர்.

பிரதமர் அக்கேள்விக்கு பதிலளித்தார்.

"முதலில் முழு அளவிலான விவாதம் நடத்தப்படும். அதன் பின்னர் தான் அரசு அறிக்கை ஒன்று வெளியிடும்" — என்று பிரதமர் பதிலளித்தார்.

உருப்படியான சேவையாற்ற முடியவில்லை அபி. சபை உறுப்பினர் கவலை

மீண்டும் தேர்தலில் நிற்கமாட்டார்

அம்பாறை, மார்ச், 6

அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபையில் நாம் நான்கு ஆண்டுகளுக்கு மேலாக பதவி வகித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நான்கு வருடகாலத்திலும் எமது சபை உருப்படியான சேவை எதையும் ஆற்றவில்லை.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. இ வினயகமூர்த்தி (ஐ.தே.க.) மேற்கண்டவாறு சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

உறுப்பினர் திரு. வினயகமூர்த்தி (ஐ.தே.க.) தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

நான்கு ஆண்டு கால பதவி வகிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் சந்தர்ப்ப வசத்தால் மேலும் அங்கம் வகித்துக் கொண்டிருக்கிறோம். இந்த கால நீடிப்பு எமது சிறந்த சேவையின் பேரில் கிடைத்ததொன்றல்ல என்பது எனது அபிப்பிராயம்.

இன்னும் சில மாதங்களில் எமது எஜமானர்களான வாக்காளப் பெருமக்கள் முன் தேர்தலில் நிற்க விரும்புபவர்கள் முகம் கொடுக்க ஆயத்தமாக வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் பல காரணங்களால் மீண்டும் தேர்தலில் நிற்பது மனச்சாட்சிக்கு ஒவ்வாதது என உணருகிறேன்.

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் குட்டி நாடாளுமன்றம் என ஆரம்ப காலத்தில் விமர்சனம் செய்யப்பட்டது'

இந்த சபையின் கௌரவ தெரிவு வழி உறுப்பினர்ள் இச் சபையைப் பொறுத்த மட்டில் எவ்வித சிறப்புரிமையையும் பெற முடியவில்லை.

பணியை ஒழுங்காக மேற்கொள்ள தெரிவு வழி உறுப்பினர்களுக்கு வாகன, தொலைபேசி, தபால் தந்தி வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

இந்த வசதிகளைச் செய்து கொடுக்கும் அதிகாரம் இச்சபைக்கு இல்லை என்பதையும் நான் அறிவேன். இப்படி அவர் கூறினர்.

லீவு இல்லை சிப்பாய் தற்கொலை

வவுனியா, மார்ச் 6

வவுனியா ஈரற்பெரியகுளம் ஆயுதப்படை முகாமில் உள்ள ஒரு சிப்பாய் தன்னைத்தானே கட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

மேலிடம் விடுமுறை கொடுக்கத் தவறியதன் காரணமாகவே அந்தச் சிப்பாய் தற்கொலை செய்து கொண்டார் என்று அறிவிக்கப்பட்டது.

4 சிப்பாய்கள் பலி: ஐவரை காணவில்லையாம்

கொழும்பு, மார்ச் 6

நயினதீவு கடல் கண்ணி வெடித்தாக்குதலில் 4 கடற்படைச் சிப்பாய்கள் மரணமானார்கள்.

ஐந்து சிப்பாய்களைக் காணவில்லை என்று பாதுகாப்பு அமைச்சர் தேற்றுக் கொழும்பில் தெரிவித்தனர்.

மந்திகையில் வங்கிக் கிளை திறக்கப்பட்டது

நாகர்கோவில், மார்ச் 6

நான்கு வார இடைவெளிக்குப் பின்னர் பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளை மந்திகையில் கடந்த திங்கட்கிழமை திறக்கப்பட்டது.

பெருந் திரளான வாடிக்கையாளர்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள நீண்ட கியூவில் நின்று கொண்டிருந்தனர்.

இவ்வங்கிக் கிளையில் வாடிக்கையாளர்களுக்கான அனைத்துச் சேவைகளும் காலை 9மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெற்று வருகின்றன.

முருகமூர்த்தி வித்தியாலயம் மைதான வசதி இன்றியும் சிறந்த போட்டி

கலிவி அதிகாரி பாராட்டு

மானிப்பாய், மார்ச், 6

மைதான வசதியின்மை, கட்டட வசதியின்மை ஆகிய குறைபாடுகள் இருந்தும் விடாமுயற்சி, ஊக்கம் காரணமாக சிறந்ததொரு போட்டியை நடத்தியுள்ளீர்கள். இதற்காக உங்களைப் பாராட்டுகிறேன்.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் இவ்வாறு கூறினர்.

வித்தியாசாலை அதிபர் திரு. வை. யோகேஸ்வரன் போட்டிக்குத் தலைமை வகித்தார். பாடசாலையின் முன்னாள் அதிபர் திரு. வி கந்தையா மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

தமிழர் ஆசிரியர் சங்க யாழ்ப்பாண செயலாளர் திரு. வி. எஸ். சிவபாலசிங்கம் பாடசாலைக் கொடியை ஏற்றி வைத்தார்.

[illegible] சிவபாலசிங்கம் பேசும் போது [illegible] தேகாரோக்கியம் மட்டுமன்றி மாணவர்கள் சலனபுத்தியற்றவர்களாகவும் விளங்க வேண்டும் என்றார்.

கொள்ளை

நாகர்கோயில், மார்ச். 6

யாக்கரையிலுள்ள தியாகராசாக் குருக்களின் வீட்டிற்கு கடந்த வெள்ளி இரவு சென்ற ஆயுதம் தாங்கிய இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

அச்சமயம் வீட்டில் குருக்களும் அவரது தகப்பனாரும் மாத்திரமே இருந்தார்கள். இவர்களது தொலைக் காட்சிப் பெட்டி டெக்கும் இன்னொரு வீட்டில் இருந்தது. துப்பாக்கி முனையில் குருக்களை அந்த வீட்டிற்குக் கூட்டிச்சென்ற இளைஞர்கள் டெக், தொலைக்காட்சிப்பெட்டி ஆகியவற்றையும் ஏனைய மின்சாரத்தில் இயங்கும் வீட்டு உபகரணங்களையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளார்களெனத் தெரிவிக்கப்படுகிறது.

1ஆம் ஆண்டு நினைவு தினம்



ஞானப்பிரகாசம் தவராசா (G.T.R.)

அன்னை மடியில்: 07 – 01 – 1954 ஆண்டவன் மடியில்: 06 – 03 – 1985

உன் அன்பான புன்சிரிப்பாலும் பண்பான பேச்சாலும் பணிவான நடத்தையாலும் எம் இதயம் கவர்ந்த அன்பின் தெய்வமே! எங்கு சென்றாய். போகும்போது மீளமாட்டேன் என ஒரு வார்த்தைதான் சொன்னாயா? ஐயோ! உன்னைக் கொடிய அரக்கர்கள் பதைக்கக் கொன்றுவிட்டார்களே. காலமெல்லாம் எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பாயென இருந்தோம். காலன் உன்னைப் பாதி வயதில் பறித்தானே! நீ சென்றாலும், நீ விட்டுச் சென்ற பாசம் எங்களைவிட்டு ஒருபோதும் நீங்காது. உன் ஆத்மா சாந்தி அடைய அந்தோனியாரை மன்றாடுகிறோம்.

உன் துயரால் வாடும்,
மனைவி, பிள்ளைகள், தாய், மாமி, சின்னையா, தம்பிமார், தங்கைமார், மைத்துனர்மார், மைத்துனி, இளையா, இளையம்மா.

G. தேவராசா குடும்பத்தினர்,
கப்பமடம், பருத்தித்துறை.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இனப் பிரச்சினைத் தீர்வுக்கு

வடக்கு - கிழக்கை இணைக்கும் புதிய திட்டம்

இந்தியாவே தயாரிக்கிறது

புதுடில்லி, மார்ச் 5

ஏதாவது ஒரு வகையான இணைப்பைவடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையே ஏற்படுத்தக் கூடியதான அரசியல் தீர்வு ஒன்றைத் தயாரிப்பதில் இந்திய அரசு அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் அமைப்புக்களும் இலங்கை அரசும் ஏற்றுக் கொள்ளக் கூடியதான திட்டமாக இது அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுக்களில் நெருங்கிய ஈடுபாடு உடையவரான தமிழக மின்துறை அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன், இத்திட்டத்தைத் தயாரிப்பதில் இந்திய அரசு அதிகாரிகளுக்கு உதவுகிறார்.

இப்புதிய திட்டம் சம்பந்தமாக இந்திய வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி, மற்றும் இந்திய அரசு அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்த பின்னர், செவ்வாய்க்கிழமை (4. 3. 86) பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்திக்க அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் திட்டம் இட்டிருந்தார்

உத்தேச அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான நடைமுறை பற்றி திரு. இராமச்சந்திரன், பிரதமருடன் பேசுவதாக இருந்தது.

இப்படி பிரபல அரசியல் விமர்சகர் திரு. ஜி. கே. ரெட்டி 'இந்து' நாளிதழில் எழுதியிருக்கிறார்.

திரு. ரெட்டி மேலும் எழுதியிருப்பதாவது:

இலங்கை இனப்பிரச்சினையைக் கையாளும் அதிகாரிகள் மத்தியில் இரு அபிப்பிராயங்கள் நிலவுகின்றன.

சமாதான முயற்சிகள் தடைபட்டால் அது தமிழருக்கு ஆபத்தாக முடியும் என்பது ஒன்று.

கடுமையான போக்கைத் தேர்ந்தெடுத்த முட்டாள் தனத்தை திரு. ஜெயவர்த்தனா உணரும்வரை இந்தியா அடுத்த நடவடிக்கையை எடுக்கக்கூடாது என்பது மற்றத்தரப்பின் வாதம்.

டில்லியில் உள்ள செல்வாக்கு மிக்க சில சக்திகள் இன்னொரு அபிப்பிராயத்தைத் தெரிவித்துள்ளன.

இலங்கை காட்டிவரும் இந்தியஎதிர்ப்புணர்வுக்கு மத்தியில், இந்திய மாநில அமைப்பு மாதிரியான திட்டம் ஒன்றை இந்தியா வைத்தால் அதற்கு இலங்கை இணங்க மாட்டாது என்பது அந்த சக்திகளின் அபிப்பிராயம்.

இப்படி திரு. ரெட்டி எழுதியிருக்கிறார்.

பொய்யாதிமாறி

குறள்:

முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி
அகத்தானும்
இன்சொ லினதே அறம்.

பொருள்:

முகத்தால் விரும்பி இனிமையுடன் நோக்கி உள்ளம் கலந்த இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும்.

மட்டக்களப்பிலும் கையெழுத்து இயக்கம்

தமிழ் எம். பிக்களுக்கு மகஜர் அனுப்ப ஏற்பாடு

மட்டக்களப்பு, மார்ச் 6

மட்டக்களப்பிலும் கையெழுத்து இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

மட்டக்களப்பு பிரஜைகள் குழு இதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது.

மட்டக்களப்புப் பகுதியிலுள்ள தமிழ் மக்கள் எதிர்நோக்கும் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை விளக்கி சுமார் 25 ஆயிரம் பேரின் கையொப்பத்துடன் மகஜர் ஒன்றை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம், பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை, மாவட்ட அமைச்சர் திருமதி ரங்கநாயகி பத்மநாதன் ஆகியோருக்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த மகஜரில் இப்பகுதியில் இடம்பெறும் ஆயுதப் படையினரின் செயற்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அப்பாவிகள் கைது, கைதானோர் தகவல் இல்லை, காணாமற் போனோர் விவரம், சுற்றிவளைப்பு, சித்திரவதை, பெண்கள் மானபங்கப் படுத்தல், உடைமைகள் சேதம் போன்ற விடயங்களுடன் மண்டூர், இருதயபுரம், தங்கவேலாயுதபுரப் படுகொலைச் சம்பவங்கள் பற்றியும் தெரிவிக்கப்படும்.

இச்சம்பவங்கள் தொடர்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை மேற்கொண்டநடவடிக்கை யாது? எதிர்கா லத்திலாவது இத்தகைய செயல்கள் இடம்பெறாமல் தடுக்க முடியாதா? எனக்கோருவார்கள்.

இவ்வறிக்கையின்பிரதிகள்கிழக்குமாகாண முஸ்லிம் எம். பிக்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது. இது தொடர்பான கையெழுத்து வேட்டை விரைவில் ஆரம்பிப்பதற்கு பிரஜைகள்குழு முடிவு செய்துள்ளது.

மக்கள் சபைகள் தமிழர்களுக்கு புதியதல்ல

பஞ்சாயத்து போன்றவையே அவை

மானிப்பாய், மார்ச். 6

மக்கள் சபைகள், அரசநிர்வாகத்துக்கு பதிலாக ஒரு இடைக்கால நீதி விசாரணைகளை மேற்கொள்ளும் அமைப்புக்களாக செயற்படுகின்ற போதிலும் தமிழர்களுக்கு இவை புதியன அல்ல. அந்நியராட்சிக்கு முன் இருந்த நிலைக்கு பஞ்சாயத்து விசாரணைகள் என்ற முன்னைய நிலைக்கு— நாம் சென்று கொண்டிருக்கிறோம்.

சமாதான சபைகள் பக்கச்சார்பின்றி ஊதியமின்றி கிராமிய சூழ்நிலையில் மக்களிடையே ஒற்றுமையையும் சமாதானத்தையும் நிலைநாட்டி வருவதையிட்டு நாம் பெருமைப்படுகிறோம்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. அ. மகாலிங்கம் இவ்வாறு கூறினார்.

உடுவில், கந்தரோடை கிராம சேவையாளர்கள் பிரிவில் உள்ள சமாதான சபைகளின் கூட்டுக்குழு கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சங்குவேலி, உடுவில் மக்கள் சபை இக்கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது.

உடுவில் மாள்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு திரு. யோசேப் பத்திநாதன் தலைமை வகித்தார்.

உடுவில் கிராமசேவையாளர் திரு. பி. ஆறுமுகம் கந்தரோடை கிராம சேவையாளர் திரு. வேலும்மயிலும் ஆகியோரும் சிறப்புரையாற்றினர்.

கிராமரீதியில் அமைக்கப்பட்ட சமாதான சபைகளில் தீர்க்கப்படுவதற்கு பிரச்சினையாக உள்ள வழக்குகளை புதிய சபை ஒன்றை நிறுவி அதன் மூலம் தீர்த்து வைப்பது பற்றி கலந்துரையாடிய பின்னர் குறிப்பிட்ட சமாதான சபையின் ஊடாக தீர்ப்பு வழங்கும் முறையே மக்கள் சபை ஆகும்.

இவ்வாறான தலைமையில் சமாதான சபைகள் ஒன்றுபட்டு ஒரு ஆலோசனை அமைப்பாக இயங்க வேண்டும் இப்படிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

உடுவில், கந்தரோடை கிராம சேவையாளர் பிரிவில் உள்ள ஆலோசனைச் சபை அங்கத்தவர்களாக—

திரு. செ. தில்லைநாதன், திரு. வ. அல்பிரட், திரு. சி. கணேசு, திரு. பி. எல். பற்றிக்ஸ், திரு. மு. பாஸ்கரகுமார், திரு. த. நடராசா, திரு. த. தேவராசா, திரு. எஸ். சிவஞானம், திரு எஸ். ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்

கட்டட வாடகையில் ஒரு தொகையை வசூலிக்க 'புளொட்' இயக்கம் முடிவு

யாழ்ப்பாணம், மார்ச், 6

பொருளாதார பலம் பெறுவதற்காக வாடகைக்குக் கொடுக்கப்பட்டுள்ள மேலதிக கட்டடங்களின் வாடகைப் பணத்தில் இருந்து கணிசமான தொகையை நாம் வசூலிப்பதற்கு முடிவு செய்துள்ளோம்.

இப்படி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் அறிவித்து உள்ளது.

கழகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் கூர்மை அடைந்து கொண்டு இருக்கின்றது.

இவ்வேளையில் விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் விடுதலை அமைப்புக்கள் பலதரப்பட்ட தடைகளை எதிர்நோக்கியுள்ளன.

இவ்வேளையில் ஒரு ஒன்றுபட்ட ஐக்கியம் ஏற்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறான ஒரு ஐக்கியம் ஏற்பட்டால் தான் விடுதலை அமைப்புக்கள் பலமடைந்து விடுதலை பெற வேண்டிய சூழ்நிலையில் முதன்மை பெற்று விளங்குவது பொருளாதார பலமின்மையாகும்.

இத்தடையே விடுதலை அமைப்புக்களில் பல்தரப்பட்ட பிரச்சினைகளுக்கும் காரணமாகவும் அமைந்து விடுகின்றது.

எமது தாபனமான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இத்தடையை தாண்டிச் செல்ல வேண்டியுள்ளது.

எனவே வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ள மேலதிக கட்டடங்களின் வாடகைப் பணத்தில் கணிசமான தொகையை நாம் வசூலிப்பதற்கு முடிவு செய்துள்ளோம்.

இந்நடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பினை நல்கும்படி சகலரையும் வேண்டுகின்றோம்.

இப்படி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் தனது அறிக்கையில் கேட்டுள்ளது

சிறப்பு வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச். 6

தந்தை தோமஸ் அவர்களின் 100வது பிறந்த ஆண்டு நிறைவையொட்டி சிறப்பு வழிபாடுகள் இடம் பெறுகின்றன எதிர்வரும் சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் (பெரியகோயில்) புனிதமரியாள் ஆலயத்தில் யாழ் மறை மாவட்ட ஆயர் வண. தியோகுப்பிள்ளை அவர்களின் தலைமையில் கூட்டுத்திருப்பலி நடைபெறும்.

முஸ்லிம் மக்களை துன்புறுத்துவது நோக்கமல்ல

ஈ. பி. ஆர். எல். எவ். விளக்கம்

அம்பாறை, மார்ச். 6

'முஸ்லிம்மக்களை அடித்துத் துன்புறுத்துவதோ, கொலை செய்வதோ எமது இயக்கத்தின் நோக்கமுமல்ல! செயலுமல்ல. அந்தவழியில் செல்வோரைத் தடுத்து நிறுத்துவதற்கும், அந்த நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக, எதிர் நடவடிக்கைகளில் இறங்குவதற்கும் என்றும் நாங்கள் பின்வாங்கியதுமில்லை. பின் வாங்கப் போவதுமில்லை'

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரம் ஒன்றில் மேற்கண்டவாறு உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் 'புனித ஜிஹாத் அல் பதாஹ்' எனும் முஸ்லிம் அமைப்புகளினால் வெளியிடப்பட்ட (கல்முனைப்பகுதியில்) 'கண்ணுக்குகண், பல்லுக்குப்பல்' எனும் தலைப்பிலான துண்டுப் பிரசுரத்திற்குப் பதில் அளிக்கும்வகையில் இந்த துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

'ஈழமுஸ்லிம் மக்களுக்கு' எனும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இத்துண்டுப்பிரசுரத்தில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான, இப்படியான ஈனச் செயல்கள்எதிர்காலத்தில் ஏற்படாதவாறு நடவடிக்கைகளில் இறங்குவதற்கும் தயாராய் இருக்கின்றோம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சாய்ந்தமருதைச் சேர்ந்த இரண்டு நபர்கள் கடத்தப்பட்டு மண்டூரில் வைத்து கொலைசெய்யப்பட்டமைக்கும், சென்ரல் கேம்பைச்சேர்ந்த ஏ எஸ் அப்துல் ஜப்பார் ஹாஜியாரின் வீட்டில் இடம்பெற்ற கொள்ளைக்கும், தமது ஸ்தாபனத்தின் எந்தப் பிரிவினருக்கும் தொடர்பு இல்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பரிசளிப்பு விழா

நாவற்கோயில், மார்ச். 6

தும்பளை அருள்மிகு நெல்லண்டை அம்மன் ஆலய பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட மகாபாரத உபந்நியாசப் போட்டியில் பரிசுபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை இரவு ஆலய மண்டபத்தில் பரிபாலன சபைத் தலைவர் திரு. சி. மு. கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது இப்போட்டியின் பரிசில்களை சிவஸ்ரீ நவரத்தினக் குருக்கள் வழங்குவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

✶ ✶ ✶

சாவகச்சேரி, மார்ச்.6

மட்டுவில் சந்திரபுரவிக்நேஸ்வரோதய மகா வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை வெள்ளிக் கிழமை கொண்டாடப் படவிருக்கிறது.

பிரதம அதிதியாக யாழ் கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார்.

விசேட அதிதிகளாக கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம், வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா ஆகியோர் கலந்து கொள்வர்.

முற்பகல் ஒன்பது மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் விழா ஆரம்பமாகும்.

சிவராத்திரி தின நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 6

திருக்கேதீஸ்வரத்தில் மகாசிவராத்திரி, எதிர்வரும் சனிக்கிழமை நடைபெற ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

மார்ச் 8, 9ஆம் திகதிகளில் அன்னதானம், தண்ணீர்ப் பந்தல் ஆகியனவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சிவன்ராத்திரி மடத்தில்அதிதிகள் தங்கியுள்ளனர். அதனால் அன்னதானம் அம்மா மடத்தில் இடம்பெறும்.

தண்ணீர்ப் பந்தல் சிவன்ராத்திரி மடத்தில் அமைக்கப்படும்.

✶ ✶

காரைநகர், மார்ச் 6

காரைநகர் சிவன் கோயில் ஈழத்துச் சிதம்பரத்தில் மகாசிவராத்திரியன்று நான்கு சாமப் பூசை, லிங்கோற்பவ பூசை ஆகியவையும் இடம்பெறும்.

நான்கு சாமப் பூசையின் இடைநேரத்தில் காரைநகர் மணிவாசகர் சபைத்தலைவர் திரு. செ. தேவதாசன் தலைமையில் விசேட சமயச் சொற்பொழிவுகள் நடைபெறவுள்ளது.

சமயப் பெரியார்கள் கலந்துகொண்டுபேருரை நிகழ்த்துவார்கள். அத்துடன் பக்திமயமானபஜனைப் பாடல்கள் இடம் பெறும்.

இதற்கான ஏற்பாடுகளை மணிவாசகர் சபை செய்துள்ளது. திருக்கேதீஸ்வரம் செல்ல முடியாத சிவனடியார்கள் இங்கு கலந்துகொள்வார்கள் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

✶ ✶

சாவகச்சேரி, மார்ச் 6

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று ஸ்ரீ துர்க்கையம்பாளுக்கு நான்கு ஜாமமும் விசேஷ அபிஷேகமும்பூஜையும் நடைபெறும்.

மறுநாள் 9ஆம் திகதி உதயத்தில் தீர்த்தோற்சவமும், உவிவிதித் திருவிழாவும் நடைபெறும்.

✶ ✶

வேலணை, மார்ச் 6

மகாசிவராத்திரியை முன்னிட்டு பெரியபுலம் மகாகணபதிப்பிள்ளையார் ஆலயத்தில் நான்கு ஜாமப்பூஜைகளும் திருமுறைப் பாராயணமும், சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெறும்.

சிவஸ்ரீ கை திருஞானசம்பந்தக் குருக்கள் தலைமையில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெறும்.

முதலாம் ஜாமப் பூசை இரவு 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

கோயில் செய்திகளில்

பாலஸ்தாபனம்

நல்லூர், மார்ச். 6

யாழ் வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயம் திருப்பணி வேலைகளின் பொருட்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டிருக்கிறது.

ராஜகோபுரம் கட்டி முடிக்கப்பட்டு பூர்த்தியாகும் நிலையிலிருக்கிறது. மற்றும் ஸ்தூபி வேலைகளும் கட்டட வேலைகளும் துரிதமாக நிறைவேற்றப்பட்டு எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டில் மகாகும்பாபிஷேகம் நடைபெற இருக்கிறது.

அண்ணமார் ஆலய சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், மார்ச்.6

தெல்லிப்பழை கோவிற்புலம் அண்ணமார் ஆலயத்தில் மகாசிவராத்திரி விழா மார்ச் 8 இல் சிறப்பாக நடைபெற உள்ளது.

அண்ணமார் ஆலய பரிபாலனசபை, அண்ணமார் ஆலயம் - சிவன் ஆலய இந்து இளைஞர் மன்றம் ஆகியன இவ் விழாவை நடத்துகின்றன.

'ஏடு காத்த நம்பி' 'சிவராத்திரி மகிமை, ஆகிய தலைப்புகளில் விஜிலுப்பாட்டு, தெல்லிநகர் செல்வராசா குழுவினரின் இன்னிசைக் கச்சேரி ஆகியன இடம் பெறும்.

'உதயன் சங்கற்பம்'

ஒளிபடைத்த கண்ணினாய் உறுதி கொண்ட நெஞ்சினாய் தெளிவு பெற்ற மதியினாய் சிறுமைகண்டு பொங்குவாய்.

- மகாகவி பாரதியார் -

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல: 15, 2வது ஒழுங்கை, தொலைபேசி: 24805
கிளை அலுவலகம் 22073
சுன்னாகம், 06.03.86 வ. 2 23

'அரசன் அன்று அறுத்தால் தெய்வம் .....!'

அரசாங்கப் படைகளின் அத்துமீறல் மற்றொரு தடவை மிகப்பெரிய அளவில் கடந்த திங்கட்கிழமை நடந்ததாகச் சொல்லப்படுகிறது.

இம்முறை அவர்களின் அட்டகாசத்துக்கு இலக்கான துரதிர்ஷ்டம் நயினாதீவுக்குக் கிடைத்திருக்கிறது.

நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழ் மக்கள் கட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களின் வீடுகள் எரிக்கப்பட்டிருக்கின்றன. கடைகள் தீயிட்டுப் பொசுக்கப்பட்டுள்ளன. மீனவர்களின் வள்ளங்களுக்கும் நெருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேடுதல் என்ற பேரில் நகை போன்ற பெறுமதியான பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கின்றன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்திலும் தமது அடாவடித் தனத்தைக் காட்டியிருக்கிறார்கள் அரச சீருடையினர்

கோயிலின் இரண்டு தேர்கள் உட்பட கலையம்சம் பொருந்திய பல உடைமைகளை எரித்து முற்றாக நாசமாக்கி விட்டார்கள். நயினை நாகபூஷணிக்குச் சாத்தியிருந்த நகைகளைக் கூட அகற்றிவிட்டார்கள்.

மனிதருக்கும் கடவுளுக்கும் வித்தியாசம் கூடத் தெரியவில்லை சீருடையினருக்கு மதங்கள், ஆலய வழிபாட்டுத் தலங்கள் சம்பந்தமான விவகாரங்கள் மக்களின் உணர்ச்சியைக் கிளறவல்லவை என்பதுகூட அவர்களுக்குப் புரியவில்லை.

தமிழ் மண்ணில், தாம் எங்கும், எதையும், எப்படியும் செய்யலாம் என்ற மனப்போக்கு அவர்களிடையே மிதமிஞ்சிவிட்டது. தம்மைக் கட்டுப்படுத்த எவருமில்லை என்ற எண்ணம் நிலைப்பட்டுவிட்டது. இல்லையேல் ஆலயங்களில் கைவைக்கத் துணிவார்களா?

கப்பல் சிதறிக் கடற்படைச் சிப்பாய்கள் மாண்டதால் அரச படையினர் கோபாவேசம் கொண்டு கட்டு மீறினார்கள், அத்து மீறினார்கள் என்று அரசாங்கம் இனிச்சாக்குப் போக்குச் சொல்லிச் சமாளிக்கப் பார்க்கக் கூடும்.

தமது வசம் ஆயுதம் இருக்கிறது என்பதற்காக, ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லாத விதத்தில் வரம்பு மீறி வன் செயல் புரிய வேண்டும் என்றோ அல்லது பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்றோ அரச படைகளுக்கு எந்தப் பொது விதியும் இருப்பதாகத் தெரியவில்லை.

அரசாங்கத்துக்கு விசுவாசமான படைகள், எப்போதும் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் தமது உயிர்போல் மதித்துப் பேணப் பின்னிற்க மாட்டா.

நாட்டுக்காக, நாட்டின் பாதுகாப்பிற்காகத் தமது உயிரை எக்கணமும் ஈந்து விடத் தயார் என்ற நிலையிலேயே படைகளுக்கு ஆட்கள் திரட்டப்படுகின்றார்கள்.

அத்தகைய பின்னணியில் —

எதிரிகையில் படைச் சிப்பாய் இறந்தார் என்பதற்காக நிராயுதபாணிகளான பொதுமக்களைப் பழிவாங்கும் நடைமுறை எந்த நாட்டிலும் இருப்பதாகத் தெரியவில்லை,; இலங்கையைத் தவிர.

இங்கு படையினர் ஒழுக்கக்கட்டுப்பாட்டை மீறித் தாம் நினைத்த போக்கில், தமது அப்போதைய மனநிலைக்கு ('மூட்டிற்கு') ஏற்ப நடந்து கொள்ள முழுமுதற் காரணம் அரசாங்கம்தான்.

வடக்குக் கிழக்கில் உள்ள படையினர், தாம் நினைத்ததுபோல் நடந்து, அட்டூழியங்களைப் புரிந்து அனர்த்தங்களை ஏற்படுத்துவதற்கு ஊக்கமளிக்கும் விதத்தில்அவர்களுக்கு சட்டரீதியான பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே தமிழ்ப் பகுதிகளில் நடக்கும் படைகளின் அத்துமீறலுக்கு முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்கவேண்டும்.

பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதாகக் காட்டிக்கொண்டு இராணுவ நடவடிக்கையில் அரசு ஈடுபடுகிறது. அது போகவே பயங்கரவாதத்தை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு தமிழ் மக்களை அழிக்கிறது அரசாங்கத்தின் அந்த இலட்சியத்தை அடைவதற்காகவே ஒழுக்கக் கட்டுப்பாடு இல்லாத படையினர் தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். அவர்களுக்கு வசதியாக மேன்மேலும் சட்டச்சலுகைகள் வழங்கப்படுகின்றன.

அரசின் இந்தத் திட்டமிட்ட இன ஒழிப்புக் குறித்து இந்தியா கண்டித்ததும், அதற்குப் பெரிதாகக் கோபம் வருகிறது.

மக்களைப் பாதுகாக்கவேண்டிய படைகளே மக்களை அழிக்கும்போது, மக்களுக்கு யார் துணை?

ஆண்டவனைத் துணைக்கு அழைக்கலாம் என்றால் அந்த ஆண்டவன் மீதும் கை வைத்து விடுகிறார்களே. ஆண்டவன் யாரிடம் போய் முறையிடுவாரோ . . . ?

யாரிடமும் முறையிடமாட்டார். அரசன் அன்று அறுப்பான்! ஆண்டவன் நின்று அறுப்பான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறையிற் - கொக்குவில்
விஞ்ஞானம்
O/L ஆசிரியர்: J. R. சூரி
நேர அட்டவணை: சனி ஞாயிறு பகல் - 1 மணி

இதயன்

06. 03. 1986

றெமிங்ரன் - மூளாய்
விஞ்ஞானம்
O/L ஆசிரியர்: J. R. சூரி
நேர அட்டவணை: புதன் மாலை சனி 5 மணி

பயங்கர பஸ் விபத்து

பதுளை, மார்ச் 6

நேற்று மாலை பதுளை கந்தகெல்ல தோட்டப் பகுதியில் பிரயாணிகள் பஸ் ஒன்று 300 அடி பள்ளத்தாக்கில் விழுந்து நொறுங்கியது. நான்கு பிரயாணிகள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். 25 பேர் ஆபத்தான நிலையில் பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

சாரதியும், கண்டக்டரும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

சகல கிளைக் குழுக்களின் வாக்காளர் அங்கத்தவர்கள் கவனத்திற்கு

31 - 12 - 1985ல் முடிவடைந்த வாக்காளர் பட்டியல் அந்தந்த கிளையின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. பட்டியலில் தங்களுடைய பெயர்கள் விடப்பட்டிருந்தால், அல்லது பிழையாக பதியப்பட்டிருந்தால், அல்லது வாக்குப்போடத் தகுதியற்றவர்களின் பெயர்கள் அப்பட்டியலில் காணப்பட்டால், தங்களுடைய எவ்வித ஆட்சேபனைகளையும் எழுத்து மூலம் இன்றிலிருந்து (06-03-1986) பத்து நாட்களுக்குள் சங்க காரியதரிசிக்கு அறிவிக்கவும். பத்து நாட்களுக்குப்பின் எழுப்பப்படும் ஆட்சேபனைகள் நிராகரிக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள
காரியதரிசி.

எமது இன்றைய ஒரிஜினல் வெளியீடுகள்

* அர்ஜுன் — ஜானகி
'வாழவைத்த நாகம் நீ'
(V.G.P. Original)
* ஜெய்சங்கர் — K. R. விஜயா
'காகித ஓடம்'
(V.G.P. Original)
* விஜயகாந்த் — அம்பிகா
'மனக் கணக்கு'
(தரமான பிரதி)

குணம்
வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665

அந்தியேட்டி அழைப்பு

அன்னை
மண்ணில்
உற்பவம்:
18 - 05 - 1951

சவூதி அரேபிய
மண்ணில்
நற்பதம்:
05 - 02 - 1986

திரு. இரததனசபாபதி
விஜயரத்தினம்
(பொறியியலாளர், கொம்மந்தறை.)

பருத்தித்துறை, தும்பளையில் பிறந்து, ஹாட்லியில் பயின்று, கட்டுப்பெத்தை பொறியியற் பீடம் அடைந்து, விரிவுரையாளனாகவும் விளங்கி, பின் உக்குவெலை, பொகவத்தனை, மஸ்கெலியா, விக்ரோரியா, கொத்மலைத் திட்ட மின் பொறியியலாளனாய் மிடுக்குடன் திகழ்ந்து, அரேபியா மண்ணிலும் அகில உலக ஸ்தாபனத்தில் உன்னதமான ஓரிடம் வகித்து.....

பொறுப்புள்ள பிள்ளையாய் — உயிர்த்துடிப்புள்ள உடன்பிறப்பாய் — உண்மையுள்ள நண்பனாய் — பரிவுடைய பர்த்தாவாய் — பிரியமுள்ள பிதாவாய் — ஆற்றலுள்ள அதிகாரியாய் — இனப்பற்றுள்ள ஓர் இயக்கத் தொண்டனாய் விளங்கி இடையினில் எமையெலாம் பிரிந்த இணையிலாத் தெய்வம் இரத்தப்புற்றுக்கு இலக்கான வேளையில் அரேபியாவில் அருகில் இருந்து அரும்பணி புரிந்த அன்பர்க்கும், அன்னவர் உடலம் இலங்கை வர இயன்றவரை முயன்ற நண்பர்க்கும், 23-02-86இல் இங்கு நிகழ்ந்த மரணச் சடங்குகளில் பங்கெடுத்த நேயர்களுக்கும் இதயக் கனிவுடன் இத்தால் நன்றிகளை நவில்கின்றோம்.

மேலும் 07-03-86 (வெள்ளி) அன்று எங்கள் கொம்மந்தறை இல்லத்தில் நிகழவுள்ள அந்தியேட்டிக்கிரியையிலும் அடுத்து நிகழும் மதிய போசனத்திலும் பங்கெடுத்துச் சிறப்பிக்குமாறு ஆர்வலர் அனைவரையும் அன்புரிமை தழுவி அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்,
திருமதி வி. சுசிலேந்திரகுமாரி (மனைவி),
சிவரஞ்சினி (மகள்), தாய், சகோதர சகோதரிகள், மாமன், மாமி

மட்டக்களப்பு

முகாம்களில் தனி அதிகாரிகள்

தடுத்து வைக்கப்பட்டவர்களை உறவினர் சந்திக்க ஏற்பாடு

மட்டக்களப்பு, மார்ச் 6

மட்டக்களப்பு மாவட்டத்தில் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை அடிக்கடி உறவினர்கள் வந்து சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முகாம்களில் தனி அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.

இந்த உறுதிமொழியை மட்டக்களப்பு இணைப்பு அதிகாரி மாக்ஸி பெரேரா கடந்த செவ்வாய் தன்னைச் சந்தித்த பிரஜைகள் குழு உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை உறவினர்கள் சந்திக்க முடியாதிருப்பதாக பிரஜைகள் குழு முறையிட்டதைத் தொடர்ந்து இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டது.

முகாம்கள், பொலீஸ் நிலையங்களில் நியமிக்கப்படும் தனி அதிகாரிகள், தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை அவர்களது உறவினர்கள் சந்திப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை இனிச் செய்து கொடுப்பார்கள்.

கைதான பின்னர் காணாமல் போன 49 தமிழர் விவரம்

இணைப்பு அதிகாரியிடம் ஒப்படைப்பு

மட்டக்களப்பு, மார்ச் 6

ஆயுதபடையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற் போனதாகக் கூறப்படும் 49 தமிழர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியல் மட்டக்களப்பு இணைப்பு அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற சந்திப்பின் போது மட்டக்களப்புப் பிரஜைகள் குழு இப்பட்டியலை இணைப்பு அதிகாரி திரு. மாக்ஸி பெரேராவிடம் ஒப்படைத்தது.

அந்த 49 பேரும் எங்கு வைத்து எந்தத் திகதியில் கைது செய்யப்பட்டார்கள்? யாரால் கைது செய்யப்பட்டார்கள்? என்ற விவரங்கள் எல்லாம் பட்டியலில் கூறப்பட்டுள்ளன.

இது பற்றி விசாரித்துச் சொல்வதாக இணைப்பு அதிகாரி, பிரஜைகள் குழுவினரிடம் தெரிவித்தார்.

பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. சாம் தம்பிமுத்து, உபதலைவர் வண பிதா சந்திரா பெர்ணாண்டோ, உறுப்பினர் திரு. எம் லீனு ஆகியோர் இணைப்பதிகாரியைச் சந்தித்தனர்.

தமிழ் அகதிப் பெண் ஹெலிக்கொப்டரில் ஆஸ்பத்திரிக்கு!

திருகோணமலை, மார்ச் 6

நோயினால் பீடிக்கப்பட்டிருந்த தமிழ் அகதிப் பெண் ஒருத்தி ஹெலிக்கொப்டர் மூலம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று மூதூர்த் தொகுதியில் இடம்பெற்றது.

சேருவில, தெகிவத்தை பகுதிகளில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு வழங்கப்படும் வைத்திய உதவிகள் பற்றி திருமலை மாவட்ட அமைச்சர் திரு. எச். ஜி. பி. நெல்சன் நேரில் சென்று பார்வையிட்டார்.

அப்போது இரத்தப் பெருக்கு நோயினால் அவதிப்பட்ட தமிழ் அகதிப் பெண் பற்றித் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பெண் உடனடியாக ஹெலிக்கொப்டர் மூலம் திருமலை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

மாவட்ட அமைச்சரின் உத்தரவின் பேரில் தான் அப் பெண் அனுப்பிவைக்கப்பட்டார்.

இந்திய கடல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தி உள்ளது—''

இப்படி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகள் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டிச் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்தியத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் இதனை முற்றாக மறுத்தார்.

இந்தியக் கடற்படைக் கப்பல் எதுவும் இந்தியக் கடல் எல்லையைத் தாண்டவில்லை என்றும் அந்தப் பேச்சாளர் சொன்னார்.

குண்டுச்சத்தம்

வல்வெட்டித்துறை, மார்ச். 6

கடந்த செவ்வாய் இரவு தொண்டமானாறு இராணுவ முகாமிலிருந்து தொடர்ச்சியாகக் குண்டுச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன.

இதனால் முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

இதுபற்றி கூறப்படுவதாவது:-

செவ்வாய் இரவு தொண்டமானாறு இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் பெரிய கடற்கரை என்னுமிடத்திலுள்ள வீடொன்றினுள் புகுந்து, பதுங்கியபோது போராளிகள் அவர்கள் மீது கைக்குண்டுகளை வீசினர்.

சிருடையினர் திருப்பிச் சுட்டனர். கைக்குண்டுகளை வீசினர். போராளிகள் எதிர்த்தாக்குதலை நடத்தியதை அடுத்து சிருடையினர் இராணுவ முகாமுக்குத் திரும்பிச் சென்றனர்.

இருதரப்பிலும் எவ்வித சேதமும் இல்லை எனத் தெரிகிறது. இச்சூழ்நிலை தொடர்ந்தே முகாமிலிருந்து குண்டுச் சத்தங்கள் கேட்டன.

ராணுவ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செல்லப்பட்ட இராம சேவையாளர்கள் அனைவரும் மண்டபம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டனர்.

இராணுவ முகாம்களுக்குச் செல்லக்கூடாது என்று இராமசேவையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர். அப்படிச் சென்றால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டது.

மாலை 5 மணியளவில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

இச் சம்பவத்தினால் பிரிகேடியர் — இராமசேவகர்கள் சந்திப்பு இடம்பெறவில்லை.

இந்தச் சந்திப்புக்காக பலாலி முகாமிலிருந்து கோட்டை முகாமிற்கு வந்திருந்த இணைப்பு அதிகாரி பின்னர் பலாலி முகாமுக்குத் திரும்பிச் சென்றதாகத் தெரிகிறது.

நயினாதீவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தால் கோயிலுக்குச் செல்ல முடியவில்லை. அகதி முகாம்களில் இருந்த அவர்கள் படகு ஒன்றில் குறிகட்டுவான் போய் அங்கிருந்து நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

நேற்றும் தாக்குதல்

இதற்கிடையில் நேற்று அனலைதீவு, குறிகட்டுவான் பகுதிகளில் பிரயாணம் செய்தவர்கள் சிருடையினரால் தாக்கப்பட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

யாழ் பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. த. குலசேகரம் காரைநகர் கடற்படைத் தளபதியுடனும், இராணுவ உயர் அதிகாரிகளுடனும் இது பற்றித் தெரிவித்தார்.

இன்று (வியாழன்) தொடக்கம் படகுச் சேவைகளை குறிப்பிட்ட நேரத்தில் நடத்தத் தாம் ஏற்பாடு செய்வதாக கடற்படைத் தளபதி உறுதி அளித்தாராம்.

காரைநகருக்கு புதிதாக இரண்டு பீரங்கிக் கப்பல்

யாழ்ப்பாணம், மார்ச் 6

நேற்று காரைநகர் கடற்படை முகாமிற்கு மேலும் புதிய இரண்டு பீரங்கிக் கப்பல்கள் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்தன. அக்கப்பலில் பெரும் எண்ணிக்கையில் படை வீரர்களும் வந்து சேர்ந்ததாகத் தெரியவருகிறது.

தமிழரிடம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலை நடத்தப் போவதாக கூறும் ஜெயவர்த்தனா, எதற்காகப் பொதுத்தேர்தலை நடத்தப் பயப்படுகிறார்?

பொதுத்தேர்தல் நடத்தப்பட்டால் தோல்வி நிச்சயம் என்பது அவருக்குத் தெரியும்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார்.

விளையாட்டரங்கு

திறமையுடன் ஆடும் யாழ்ப்பாணக் கல்லூரி அணி

மிக முக்கிய ஆட்டம் நாளை நடைபெறுகிறது

— விளையாட்டுச் செய்தியாளர்:- சண். ஜோன்சன் —

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ் மாவட்டத்தில் உள்ள கல்லூரி கிரிக்கெட் அணிகளை அறிமுகப்படுத்தும் வர்சையில் இன்று இரண்டு அணிகள் இடம் பெறுகின்றன.

அதில் ஒன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி.

பல வருட அனுபவத் திறமை கொண்ட பழைய வர்களையும், சிறப்பாக ஆடும் புதியவர்களையும் கொண்ட யாழ்ப்பாணக் கல்லூரி அணி கலந்து கொண்ட நாலு மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் ஆட்டங்களில் இரண்டு ஆட்டங்களில் வெற்றிஅடைந்திருக்கிறது.

சென்ஜோன்ஸ் கல்லூரி அணியை இந்த வருடம் தோற்கடித்த ஒரே அணி யாழ்ப்பாணக் கல்லூரியே என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அணிக்காக ஆடும் வீரர்கள் விவரம் வருமாறு:-

அணித் தலைவர் ஜி. இராகவன்;- இந்த அணிக்காக மூன்றும் வருடமாக விளையாடும் பல்துறை வல்லுனர். லாவகமாக ஆடும் வலது கை துடுப்பாட்ட வீரர். வலது கை வேகப் பந்து வீச்சாளர். யாழ்ப்பாணக் கல்லூரியின் நம்பிக்கை நட்சத்திரங்களுள் ஒருவர்.



ஜி. இராகவன்

ஏ. ஜெசுரா தம்பிராஜா:- அணியின் ஆரம்ப வலதுகை துடுப்பாட்ட வீரர். நடுத்தர வேக பந்து வீச்சாளர். மூன்றும் வருடமாக ஆடுபவர்.

ஜெ. அன்ரன் ராஜகரியர்:- சிறந்த சுழல்பந்து வீச்சாளர், வலதுகை துடுப்பாட்ட வீரர்.

ஆர். முறேஷ்:- வேகமாக ஓட்டங்களைக் குவிக்கும் வலதுகை துடுப்பாட்ட வீரர். யாழ்ப்பாணக் கல்லூரி அணி இவரிடம் இருந்து அதிகம் எதிர்பார்க்கிறது.

எஸ். நோபிள் சுரேந்திரன்:- அணியின் துடிப்பான விக்கெட் காப்பாளர். பந்தை மிக வேகமாக விளாசி அடிக்க வல்ல வலதுகை துடுப்பாட்ட வீரர்.

எஸ். சயந்தக்குமார்:- லாவகமாகத் துடுப்பெடுத்தாடும் வலதுகை துடுப்பாட்ட வீரர். வலதுகை சுழல் பந்து வீச்சாளர். சிறந்த பந்து தடுப்பாளர். இவரிடம் இருந்து பல சாதனைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ரி. ஹக்ஸ்லி:- அணியின் ஆரம்ப வலது கை துடுப்பாட்டக்காரர், வலது கை நடுத்தரவேக பந்து வீச்சாளர்.

மேற்குறிப்பிட்ட ஐவரும் இந்த அணிக்காக இரண்டாம் வருடமாக ஆடுபவர்கள். இனிவரும் ஏனையவர்கள் அணிக்கு புதுமுகங்கள்.

ரி. நித்தியராசன் அணியின் ஆரம்ப வலது கை வேகப்பந்து வீச்சாளர். அணியின் சிறந்ததொரு இடதுகை துடுப்பாட்ட வீரர். இவர் ஒரு பல்துறைவீரர்.

ஆர். குலசிங்கம்:-இடது கை துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து தடுப்பாளர் என்று விமரிசிக்கப்படுபவர்.

எஸ். ஜெயரஞ்சன்:- வேகமாக ஓட்டங்களைப் பெறக்கூடிய வலது கை துடுப்பாட்ட வீரர். திறமையான பந்து தடுப்பாளர்.

விஜயகுமார்:- சிறந்த வலது கை நடுத்தர வேக பந்து வீச்சாளர். வலது கை துடுப்பாட்ட வீரர்.

ஹரிச்சந்திரன்:-சிறந்த சுழல் பந்து வீச்சாளர், இடது கை துடுப்பாட்ட வீரர்.

தவணிருபன்:- இடது கை துடுப்பாட்ட வீரர். வலது கை சுழல் பந்து வீச்சாளர்.

சாதனைகள்ஈட்டி வரும் யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் பயிற்சியாளராக ஆசிரியர் திரு ரி. நித்தியரெட்ணம் கடமையாற்ற விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. ரி. ஆனந்தரெட்ணம் அணியை சிறப்பாக வழிநடத்தி வருகிறார்.

யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் வருடாந்த முக்கிய ஆட்டமான ''பற்றில் ஒவ்த கோல்ட்ஸ்'' (''Battle of the Golds'') ஆட்டம் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறுகின்றன. சென் பற்றிக்ஸ் கல்லூரியுடன்இந்த ஆட்டம் நடைபெறும்.

உடற்பயிற்சி போட்டி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தால் யாழ் மாவட்டத்தில் நடத்தப்படும் பாடசாலைகளுக்கிடையிலான உடற் பயிற்சிப் போட்டிகள் ஆரம்பமாகின்றன.

யாழ் மாவட்டத்தில் உள்ள 11வட்டாரப் பாடசாலைகளும் 3 கொத்தணிப் பாடசாலைகளும் பங்குபற்றும் இப் போட்டிகள் இன்று முதல் இம் மாதம் 19 ஆம் திகதி வரை நடைபெறும்.

புங்குடுதீவு வட்டாரப் பாடசாலைகள், புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலைகள் ஆகியவற்றுக்கான உடற் பயிற்சிப் போட்டிகளே இன்று நடைபெறுகின்றன.

இந்தப் போட்டிகள் யாவும் புங்குடுதீவு மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

மாணவர் அனுமதி பின்போடப்பட்டது

கொழும்பு, மார்ச். 6

கொழும்பு பல்கலைக்கழகத்தில் புது மாணவர்கள் அனுமதிக்கப்படுவது பின்போடப்பட்டுள்ளது.

நேற்று புது மாணவர் அனுமதிக்கப்படுவதாக இருந்தது.

கொழும்பு பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானத் துறை பீடாதிபதிகள் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து. இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செயலில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது என்று இலங்கை குற்றம் சுமத்துகின்றது.

அந்தக் குற்றச்சாட்டுத் தவறானது.

இலங்கைச் சம்பவங்களுடன் இந்தியாவுக்கு எதுவித தொடர்பும் கிடையாது.

இப்படி பிரதமர் காந்தி சொன்னார்.

வடக்கு மீனவர்களுக்கு நிவாரண உதவி

வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 6

வட பகுதிக் கடலில் மீன் பிடித்தலுக்குத் தடை விதிக்கப்பட்டதால் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவது சம்பந்தமான பூர்வாங்க நடவடிக்கைகளை யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் மேற்கொண்டு வருகின்றார்.

கரையோரப் பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் இதற்குத் தேவையான புள்ளிவிவரங்களைக் கொண்ட அறிக்கைகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

பூர்வாங்க அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு மேலிடத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

நிவாரணத் தொகையாக எவ்வளவு பணம் வழங்குவது என்பது பற்றிய இறுதி முடிவு அதன் பின்னர்தான் எடுக்கப்படும் என்று தெரியவருகிறது.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷ்ரு உமா எக்ஸ்போர்ட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 06-03-1986
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under number QJ 60/N/86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org